Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 154 | உள்ளூர் - 03.06.2026 | புதன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 154 | வெளியூர் - 04.06.2026 | வியாழன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**மனை, வீடு, சொத்து விற்பனை தாமதமா? 8 பரிகாரங்கள்!**

**2027 மார்ச்சில் உள்ளாட்சி தேர்தல்!**

**ஜூன் 4-ல் தென்மேற்கு பருவமழை!**

**கர்நாடகாவில் மீண்டும் அதிகார சண்டை!**

# டெல்லி தீ விபத்து: பலி எண்ணிக்கை 21 ஆக உயர்வு; பிரதமர் இழப்பீடு அறிவிப்பு!





புதுடெல்லி, ஜூன். 03–

டெல்லி மாளவியா நகரில் உள்ள உணவு விடுதி ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டது. டெல்லி தீயணைப்பு துறையினர் தகவல் அறிந்து சம்பவ பகுதிக்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதில், காயமடைந்த 11 பேரை மீட்டு சிகிச்சைக்காக ஆம்புலன்சில் கொண்டு சென்றனர். டாக்டர்கள் அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். அவர்கள் கூறும் தகவலின் அடிப்படையிலேயே பிற விவரங்கள் தெரிய வரும் என போலீசார் தெரிவித்தனர்.

எனினும், தீ விபத்தில் சிக்கி 10 பேர் பலியாகி உள்ளனர் என முதல்கட்ட தகவல் வெளியானது. தீயை அணைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. இந்நிலையில், பலி எண்ணிக்கை 21 ஆக உயர்ந்து உள்ளது. பலி உயர்வு மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது. இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் உடனடியாக தெரிய வரவில்லை. அதுபற்றியும் விசாரணை நடந்து வருகிறது.

இதுவரை 37 பேர் மீட்கப்பட்டு சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டனர். பலியானவர்களில் பலர் மத்திய ஆசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளை சேர்ந்தவர்கள் என தகவல் தெரிவிக்கின்றது. இந்த விபத்தில் பலி எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த சம்பவத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள அவர், காயமடைந்த நபர்கள் விரைவில் குணமடைய வேண்டி கொள்கிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து உதவிகளையும் அதிகாரிகள் வழங்குவார்கள் என பதிவிட்டு உள்ளார்.

பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து, உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் இழப்பீடு அளிக்கப்படும் என தெரிவித்து உள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தருண் கர்க் (Thiru. Tarun Garg) மற்றும் உயர் அலுவலர்கள் சந்தித்துப் பேசினர்.




தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், கோயம்புத்தூர் மாவட்ட சிறுதொழில்கள் சங்கத்தலைவர் (CODISSIA) எம். கார்த்திகேயன், துணைத் தலைவர் வி. ரங்கசாமி, CODISSIA இன்டெக் தொழில்நுட்ப மைய (COINTEC) கௌரவச் செயலாளர் எம். வி. ரமேஷ் பாபு, CODISSIA Defence Innovation and Atal Incubation மையத்தின் (CDIIC) இயக்குநர் வி. சுந்தரம் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள்.

# டிரம்ப் வைத்த செக்!

# இனி இந்தியாவுக்கு 12.5% வரி! கனடாவுக்கு 10% வரி!

## இந்திய ஏற்றுமதிக்கு புதிய பிரச்சனை!!




அமெரிக்கா, ஜூன். 03–

அமெரிக்காவில் என்ன நடந்தாலும் அது உலகையே புரட்டிப் போட்டுவிடும். அது நல்லதாக இருந்தாலும் சரி.. கெட்டதாக இருந்தாலும் சரி. ஏனெனில் அமெரிக்கா தான் இருப்பதிலேயே பெரிய பொருளாதாரம் கொண்ட நாடாக இருக்கிறது. வர்த்தகம் தொடங்கி அனைத்திலும் டாலர் தான் முதன்மை வகிக்கிறது. அப்படி இருக்கையில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எந்த ஒரு அறிவிப்பை வெளியிட்டாலும் உடனே உலக நாடுகள் அந்த அறிவிப்பின் பக்கம் திரும்பிவிடும். தற்போது ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார். அமெரிக்காவிற்குள் இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு பொருட்களுக்கு 10% முதல் 12.5% புதிய வரிகளை விதிக்க அமெரிக்க அரசு திட்டமிட்டு வருகிறது.

இதில் பிரச்சனை என்னவென்றால் கனடா, மெக்சிகோ, ஐரோப்பிய ஒன்றியம், தைவான், இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்து அமெரிக்காவிற்குள் வரும் பொருட்களுக்கு வெறும் 10 சதவீத வரி மட்டும் தான் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் சீனா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு இனி 12.5% வரி விதிக்கப்படுமாம்.

உலகெங்கிலும் உள்ள 60 நாடுகள் தங்கள் ஊழியர்களை கட்டாயப்படுத்தி வேலை வாங்கி அவர்களுடைய செலவை குறைத்துக் கொண்டு, மிகவும் குறைந்த விலைக்கு பொருட்களை அமெரிக்காவிற்குள் இறக்குமதி செய்வதாக குற்றச்சாட்டுகள் எழுந்தது. குறைந்த கூலியில் தயாரிக்கப்படும் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும்போது அமெரிக்காவிற்குள் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான தேவை குறைந்துவிடும். அங்கு நல்ல சம்பளம் கொடுத்து தயாரிக்கும் அமெரிக்க நிறுவனங்களால் பிற நாடுகளின் விலையோடு போட்டி போட முடியவில்லை. இதனால் அமெரிக்கர்களின் வேலைவாய்ப்பும், வியாபாரமும் கடுமையாக பாதித்தது. இதை தடுக்கவே இந்த வரி விதிப்பு.

இது குறித்து பேசிய அமெரிக்க வர்த்தக தூதரான ஜெமீசன் கிரியர், அமெரிக்காவுடன் வர்த்தகத்தில் ஈடுபடும் சில வர்த்தக நாடுகள் கட்டாயப்படுத்தி உழைப்பை வாங்கிக் கொண்டு பொருட்களை இறக்குமதி செய்கின்றன. இது ஏற்றுக் கொள்ள முடியாததாகவே பார்க்கப்படுகிறது. இதனால் அமெரிக்க நிறுவனங்கள் போட்டியிட முடியாத களத்தில் போட்டி போட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

ஆனால் ஏற்கனவே சில நாடுகள் இதைத் தடுக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. உலகளவில் அனைத்து நாடுகளும் பின்பற்றுவதற்காகவே இந்த வரி விதிப்பு என்று கூறியுள்ளார். இதற்கு முன்னரும் டொனால்ட் டிரம்ப் பல நாடுகள் மீது அதிரடியாக வரிகளை விதித்தார். ஆனால் அமெரிக்க உச்ச நீதிமன்றம் தலையிட்டு டிரம்ப் விதித்த வரி செல்லாது என அறிவித்தது. பொதுவாக ஒரு நாடு வரி விதித்தால் பதிலுக்கு மற்ற நாடுகளும் வரி விதிக்கும். ஆனால் இந்த முறை 12.5 சதவீதம் வரி விதிக்கப்பட்டாலும், அமெரிக்காவுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சில நாடுகள் அமைதி காத்து வருகின்றன.

இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில் ஜூலை 6ஆம் தேதிக்குள் புதிய வரி விதிப்பு குறித்த தகவல்கள் அதிகாரிகளை சென்றடைய வேண்டும் என்றும் அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த வரி விதிப்பு முறை இந்தியாவிற்கு ஒரு சில பிரச்சினைகளை கண்டிப்பாக ஏற்படுத்தும். ஏற்கனவே குறைந்த வரியில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்படும்போது அங்கு உள்ள விற்பனையாளர்கள் அதை ஈடுகட்ட வாடிக்கையாளர்களின் மீது வைப்பார்கள். இதனால் இந்தியாவின் பொருட்கள் அமெரிக்காவில் அதிகரிகும். அப்போது உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்கள் விலை உயர்வாக இருந்தால், மக்கள் அவற்றை வாங்க தயங்குவார்கள். இது இந்தியாவுக்கு சிக்கலை ஏற்படுத்தும் வாய்ப்பும் இருக்கிறது.

இனி வரும் காலங்களில் ஏற்றுமதியில் என்னென்ன பிரச்சனைகள் ஏற்படும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# இந்தியாவுக்கு மீண்டும் நெருக்கடி தரும் அமெரிக்கா..?




அமெரிக்கா, ஜூன். 03–

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வது தொடர்பாக இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான கருத்து வேறுபாடுகள் மீண்டும் தலைதூக்க தொடங்கி உள்ளது.. ரஷ்ய எண்ணெயை இறக்குமதி செய்வதற்காக இந்தியாவுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு விலக்குகள் மற்றும் ஏற்பாடுகளை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று அமெரிக்க செனட் சபை உறுப்பினர் மார்கோ ரூபியோ வலியுறுத்தியுள்ளார்.

# 103-வது பிறந்தநாள்: கருணாநிதி நினைவிடத்தில் மு.க.ஸ்டாலின் மரியாதை!




சென்னை, ஜூன். 03–

முன்னாள் முதல்–அமைச்சர் கருணாநிதியின் 103–வது பிறந்தநாள் விழா கொண்டாடப்படுகிறது. தி.மு.க. சார்பில் சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள கருணாநிதி நினைவிடத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி, மரியாதை செலுத்தினார்.

அவருடன் திமுக துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி., எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் உடனிருந்தனர்.

இதனைத்தொடர்ந்து சென்னை தேனாம்பேட்டையில் அமைந்துள்ள தி.மு.க. இளைஞரணியின் தலைமை அலுவலகமான அன்பகத்தில் பெரியார். அண்ணா, கருணாநிதி ஆகியோரின் உருவச்சிலைகள் நிறுவப்பட்டுள்ளது. இந்த 3 தலைவர்களின் சிலைகளை மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

# தமிழகத்தில் மீண்டும் ஸ்டெர்லைட் காப்பர் ஆலை?




தூத்துக்குடி, ஜூன். 03–

தூத்துக்குடியில் மூடப்பட்டுள்ள ஸ்டெர்லைட் காப்பர் ஆலையை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டுவர நிறுவனம் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்காக தமிழக முதல்வர் விஜய்யை சந்திக்க நிர்வாகம் முயற்சி மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது. இருப்பினும், இதுகுறித்து அரசு அல்லது நிறுவன தரப்பில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை. ஸ்டெர்லைட் விவகாரம் மீண்டும் அரசியல் மற்றும் சமூக வட்டாரங்களில் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 03.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 20-ம் தேதி

# இந்தியாவில் அதிகரிக்கும் சிசேரியன் பிரசவங்கள்!




இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாக சிசேரியன் (Cesarean Section) பிரசவங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இயற்கை பிரசவத்தை விட அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பிறப்பிக்கும் நடைமுறை பல மருத்துவமனைகளில் பொதுவான ஒன்றாக மாறியுள்ளது. இந்த மாற்றம் மருத்துவ உலகிலும், சமூகத்திலும், பொதுமக்களிடையிலும் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. சிசேரியன் பிரசவம் என்பது தாயின் வயிற்றுப் பகுதி மற்றும் கருப்பை பகுதியில் அறுவை சிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுக்கும் முறையாகும். சில அவசர மருத்துவ சூழ்நிலைகளில் இது தாய் மற்றும் குழந்தையின் உயிரைக் காப்பாற்றும் முக்கியமான சிகிச்சையாக கருதப்படுகிறது.

உலக சுகாதார அமைப்பு (WHO) ஒரு நாட்டில் சிசேரியன் பிரசவ விகிதம் 10 முதல் 15 சதவீதம் வரை இருந்தால் போதுமானது என்று கூறுகிறது. ஆனால் இந்தியாவின் பல மாநிலங்களில் இந்த விகிதம் 30 முதல் 60 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. குறிப்பாக தனியார் மருத்துவமனைகளில் சிசேரியன் பிரசவ விகிதம் மிகவும் அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சில மருத்துவமனைகளில் பாதிக்கும் மேற்பட்ட பிரசவங்கள் சிசேரியன் முறையிலேயே நடைபெறுகின்றன.

இந்த அதிகரிப்புக்கு பல காரணங்கள் உள்ளன. முதலில், கர்ப்பிணிப் பெண்களின் வயது அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்க காரணமாகும். தற்போது பல பெண்கள் 30 வயதிற்கு பிறகு கர்ப்பம் தரிக்கின்றனர். வயது அதிகரிக்கும் போது கர்ப்ப கால சிக்கல்கள் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் மருத்துவர்கள் சிசேரியனை பரிந்துரைக்க நேரிடுகிறது. உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், உடல் பருமன் போன்ற உடல்நலப் பிரச்சினைகளும் சிசேரியன் விகிதத்தை உயர்த்துகின்றன. இன்றைய வாழ்க்கை முறையில் உடற்பயிற்சி குறைவு மற்றும் ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்களும் இதற்கு காரணமாக உள்ளன. சில நேரங்களில் குழந்தையின் நிலை சரியாக இல்லாதபோது அல்லது தொப்புள் கொடி சிக்கல் ஏற்பட்டால் சிசேரியன் அவசியமாகிறது. இரட்டைக் குழந்தை அல்லது பல குழந்தைகள் கருவில் இருப்பதும் அறுவை சிகிச்சை தேவைப்படும் சூழலை உருவாக்குகிறது. முன்னர் ஒரு முறை சிசேரியன் செய்த பெண்களுக்கு மீண்டும் சிசேரியன் செய்யப்படும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. இதனால் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கும் சிசேரியன் விகிதம் உயர்ந்து வருகிறது.

மருத்துவ தொழில்நுட்ப வளர்ச்சியும் ஒரு காரணமாக பார்க்கப்படுகிறது. கர்ப்ப கால கண்காணிப்புகள் மிகவும் துல்லியமாக மாறியுள்ளதால், ஆபத்து இருப்பதாக கருதப்படும் சூழ்நிலைகளில் மருத்துவர்கள் பாதுகாப்பு கருதி சிசேரியனை தேர்வு செய்கின்றனர். சில பெண்கள் பிரசவ வலியைப் பற்றிய பயத்தால் தாங்களாகவே சிசேரியனை விரும்புகின்றனர். குறிப்பிட்ட நாளில் குழந்தை பிறக்க வேண்டும் என்ற குடும்ப விருப்பங்களும் சில நேரங்களில் தாக்கம் செலுத்துகின்றன. தனியார் மருத்துவமனைகளில் நேர மேலாண்மை மற்றும் வசதி காரணங்களாலும் சிசேரியன் அதிகரிக்கிறது என்ற விமர்சனங்களும் உள்ளன. ஆனால் அனைத்து சிசேரியன்களும் தேவையற்றவை என்று கூற முடியாது. பல சந்தர்ப்பங்களில் இது உயிர்காக்கும் மருத்துவ முறையாக உள்ளது. தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழலில் சிசேரியன் மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்.

அதே நேரத்தில் தேவையற்ற சிசேரியன்கள் உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்தலாம். அறுவை சிகிச்சைக்குப் பிறகு மீளும் காலம் இயற்கை பிரசவத்தை விட அதிகமாக இருக்கும். தாய்க்கு வலி, தொற்று, இரத்தப்போக்கு போன்ற அபாயங்கள் இருக்கலாம். அடுத்தடுத்த கர்ப்பங்களில் சிக்கல்கள் உருவாகும் வாய்ப்பும் உள்ளது. குழந்தைக்கும் சில உடல்நல சவால்கள் ஏற்படலாம் என்று சில ஆய்வுகள் கூறுகின்றன. இயற்கை பிரசவத்தின் போது கிடைக்கும் சில நுண்ணுயிர் பாதுகாப்புகள் சிசேரியனில் குறையலாம் என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இதனால் மருத்துவர்கள் சிசேரியனை அவசியமான சூழ்நிலைகளில் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு சரியான விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டும். பிரசவம் குறித்த அச்சங்களை நீக்க வேண்டும். கர்ப்ப கால உடற்பயிற்சி மற்றும் யோகா போன்றவை இயற்கை பிரசவத்திற்கான வாய்ப்பை அதிகரிக்க உதவுகின்றன. சத்தான உணவு முறையும் முக்கிய பங்கு வகிக்கிறது. அரசு மருத்துவமனைகளில் இயற்கை பிரசவத்தை ஊக்குவிக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மருத்துவர்களும் நோயாளிகளும் இணைந்து சரியான முடிவுகளை எடுக்க வேண்டும்.

ஒரு பெண்ணின் உடல்நிலை, குழந்தையின் நிலை மற்றும் மருத்துவ ஆலோசனைகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே பிரசவ முறை தேர்வு செய்யப்பட வேண்டும். சிசேரியன் என்பது தவறானது அல்ல. இயற்கை பிரசவம் மட்டுமே சரியானது என்றும் கூற முடியாது. இரண்டிற்கும் தனித்தனி நன்மைகள் மற்றும் தேவைகள் உள்ளன. முக்கியமானது தாயும் குழந்தையும் பாதுகாப்பாக இருப்பதுதான். இந்தியாவில் அதிகரித்து வரும் சிசேரியன் பிரசவங்கள் குறித்து ஆரோக்கியமான விவாதங்கள் தேவைப்படுகிறது. மருத்துவ காரணங்கள் இல்லாமல் சிசேரியன் செய்வதை குறைப்பதும் அவசியம். அதே நேரத்தில் தேவையான நேரத்தில் சிசேரியனை மறுப்பதும் ஆபத்தானது. சமநிலையான அணுகுமுறையே சிறந்த தீர்வாகும். தாயின் நலனும் குழந்தையின் பாதுகாப்பும் முதன்மையாக கருதப்பட வேண்டும். அப்போதுதான் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும். சிசேரியன் பிரசவங்கள் குறித்த சரியான புரிதல் பொதுமக்களிடையே உருவாக வேண்டியது காலத்தின் தேவை ஆகும்.

# அரசின் வளர்ச்சி பணிகளை விரைவுபடுத்த.. மாவட்டங்களுக்கு பொறுப்பு அமைச்சர்கள் நியமனம்!



சென்னை, ஜூன். 03–

மாவட்ட வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்தவும். பொதுமக்களுக்கு சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளை கண்காணிக்கவும். இயற்கைச் சீற்றம், நோய்த்தொற்று இன்னபிற நேரங்களில் அவசரகால பணிகளை கூடுதலாக மேற்கொள்ளவும். அனைத்து மாவட்டங்களுக்கும் பொறுப்பு அமைச்சர்களை நியமனம் செய்து தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை சார்ந்த திட்டப் பலன்களும் பொதும க்களுக்கு விரைவாக சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு சீரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. இயற்கைச் சீற்றம். நோய்த்தொற்று மற்றும் பல்வேறு இடர்பாடான சூழ்நிலைகளில், இந்தத் திட்டப் பணிகளை மாவட்ட அளவில் கூர்ந்தாய்வு செய்து, விரைவுபடுத்தும் வகையில் ஏற்கனவே இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கண்காணிப்பு அலுவலர்களாக (Monitoring Officers) நியமித்து அரசு கண்காணித்து வருகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில், அமைச்சர் பெருமக்களையும் இப்பணியில் முழுமையாக ஈடுபடுத்த அரசு முடிவெடுத்துள்ளது.

**மாவட்ட வளர்ச்சிப் பணிகள்**

அதன்படி, அமைச்சர் பெருமக்களை. அனைத்து மாவட்டங்களுக்கும் பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்து, அந்தந்த மாவட்ட வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்தவும், பொதுமக்களுக்கு சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளை கண்காணிக்கவும்.

இயற்கைச் சீற்றம், நோய்த்தொற்று இன்னபிற நேரங்களில் அவசரகால பணிகளை கூடுதலாக மேற்கொள்ளவும். வருவாய் மாவட்ட வாரியாக, அமைச்சர்களை பொறுப்பு அமைச்சர்களாக பின்வருமாறு நியமனம் செய்யப்படுகின்றனர்.

# நாடு முழுவதும் 8,750 சூதாட்ட இணையதளங்கள் முடக்கம்!




பெங்களூரு, ஜூன். 03–

இந்த ஆண்டு நடந்த ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளின்போது சட்டவிரோத சூதாட்ட இணையதளங்கள், செயலிகள் மூலம் பலர் சூதாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழாவின் இறுதிப்போட்டி கடந்த 31–ம் தேதி குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் நடந்தது.

இந்த போட்டியிலும் பெரிய அளவில் சூதாட்டம் நடக்க இருப்பதாக சைபர் கிரைம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனால் கர்நாடக போலீசாரும், சைபர் குற்றப்பிரிவு அதிகாரிகளும் இணைந்து சூதாட்டம் நடப்பதை தடுக்க உன்னிப்பாக கண்காணித்து வந்தனர். அப்போது ஏராளமான சட்டவிரோத சூதாட்ட இணையதளங்கள் இருப்பதை கண்டறிந்தனர்.

அந்த இணையதளங்கள் மூலம் அப்பாவி மக்களை ஏமாற்றி பணம் பறிக்கப்பட்டு வந்ததும் தெரியவந்தது. இந்த நிலையில் ஐ.பி.எல். இறுதிப்போட்டியை குறிவைத்து நாடு முழுவதும் 8 ஆயிரத்து 750 சூதாட்ட இணையதளங்கள் செயல்படுவதாகவும், அவற்றை முடக்க வேண்டும் என்றும் கர்நாடக போலீசார், மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்துக்கு பரிந்துரை செய்தனர். இந்த பரிந்துரையின்பேரில் நாடு முழுவதும் சட்டவிரோதமாக செயல்பட்டு வந்த 8 ஆயிரத்து 750 சூதாட்ட இணையதளங்களை முடக்கி மத்திய அரசு அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

# தமிழகம் முழுவதும் பள்ளிகள் திறப்பு- வகுப்பறைகள் சுத்தம் செய்யும் பணி தீவிரம்!



சென்னை, ஜூன். 03–

தமிழக முழுவதும் அனைத்து பள்ளிகளும் (ஜூன் 4–ந்தேதி) திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்மூலம்மாணவர்களுக்கு கோடை விடுமுறை காலம் இந்த ஆண்டு அதிகபட்சமாக 49 நாட்கள் கிடைத்துள்ளது.

கோடை விடுமுறையை மகிழ்ச்சியாக கழித்த மாணவர்கள் தற்போது பள்ளி திறக்கப்படுவதால் சொந்த ஊர்களுக்கு திரும்பி வருகிறார்கள்.

பள்ளிகள் திறக்கப்படுவதால் மாணவர்கள் புதிய வகுப்புகளுக்கு செல்ல இருக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு மேலாக பள்ளிகள் மூடப்பட்டிருந்த நிலையில் அடிப்படையான வசதிகளை சீரமைக்க வேண்டும் என்று கல்வித்துறை உத்தரவிட்டிருந்தது.

அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகள் அரசு பள்ளிகளில் தூய்மை பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தினர்.

கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக இந்தப்பணிகள் நடைபெற்று வந்தன. பள்ளிக்கு புதிதாக வரும் மாணவர்களை வரவேற்கவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மழலை வகுப்புகள், 1–ம் வகுப்பு, பிளஸ்–1 ஆகிய வகுப்புகளில் மாணவர்கள் புதிதாக சேர்ந்து இருக்கிறார்கள்.

இதுகுறித்து பள்ளிக் கல்வித்துறை இயக்குனர் கண்ணப்பன் கூறியதாவது:–

பள்ளி திறக்கப்படும் முதல் நாளே மாணவர்களுக்கு பாட புத்தகம், நோட்டு புத்தகம், சீருடை வழங்குவதற்கு அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

1–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை விலையில்லா பாட புத்தகங்களும், ஒன்று முதல் 10–ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகங்களும் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படுகிறது.

இது தவிர 1 முதல் 8–ம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவிகளுக்கு 2 செட் இலவசசீருடை வழங்கப்படும். அனைத்து பள்ளிகளுக்கும் இவை அனுப்பப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன. தமிழக முழுவதும் சுமார் 4 கோடி பாட புத்தகங்களும் சுமார் 5 கோடி நோட்டுப் புத்தகங்களும் பாடநூல் கழகம் சார்பில் வழங்கப்படுகிறது.

மாணவர்கள் முதல் நாளே இவற்றைப் பெறக்கூடிய வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் புதிய மாணவர் சேர்க்கையும் தொடர்ந்து நடைபெறுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

சென்னையை பொறுத்த வரையில் மாநகராட்சி சார்பில் 417 பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகிறது. 206 தொடக்கப் பள்ளிகளும் 130 நடுநிலைப் பள்ளிகளும் 46 உயர்நிலைப் பள்ளிகளும் 35 மேல்நிலைப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன.

காலை உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1 முதல் 5–ம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு சுவையான காலை உணவு நாளை முதல் வழங்கப்படுகிறது. பள்ளி திறப்பையொட்டி மாணவர்களை வரவேற்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



தேனி மாவட்டம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மின்னணு வாக்குபதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு வைப்பு அறையில் வைக்கப்பட்டுள்ள வி.வி.பேடு இயந்திரத்தில் நடந்து முடிந்த 2026ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின்போது பொருத்தப்பட்ட தெர்மல் பேப்பர் ரோல்களை அகற்றும் பணி,அணைத்து கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் நடந்தது. இதனை மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் ஆய்வுசெய்து பார்வையிட்டார்.



தேனி மாவட்டம் வீரபாண்டி பேரூராட்சி முத்துதேவன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கான சீருடைகள் பாடபுத்தகங்களை மாவட்ட ஆட்சி தலைவர் வைத்திநாதன் நேரில் சென்று ஆய்வு செய்து பார்வையிட்டார்.



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மதுபாலன் மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

# முன்னாள் முதலமைச்சர் கலைஞர் பிறந்தநாள் விழா!



திருப்பூர், ஜூன். 03–

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு திருப்பூர் மத்திய மாவட்டம் வாலிபாளையம் பகுதி

கழகத்திற்கு உட்பட்ட 34 வது வார்டு மண்ணரை பேருந்து நிலையத்தில் பகுதி செயலாளர் பி.ஆர்.செந்தில்குமார் எம்.சி. 34 வது வார்டு செயலாளர் பி.ஆர் இளங்கோ ஆகியோரின் ஏற்பாட்டில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது இந்த நிகழ்வில் கழக நிர்வாகிகள் உடன்பிறப்புகள் பொதுமக்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்...



# பூர்வீகச் சொத்து.. சொந்த மனை, வீடு விற்பனையில் இழுபறி? 8 சூப்பர் 8 பரிகாரங்கள்!




அனைத்துவிதமான சொத்து விவகாரங்களுக்கும் சட்டரீதியான தீர்வுகள் இருக்கின்றன... எனினும் சிலசமயங்களில் தங்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயம் கிடைக்காமல் போய்விட்டதாக கருதுபவர்கள், அல்லது வழக்கு விசாரணையை விரைந்து முடிக்க வேண்டும் என்று விரும்புபவர்கள் சில பரிகாரங்களை செய்யலாம். இதனை நம்பிக்கையுடன் செய்யும்போது, சொத்து பிரச்சனைகள் மெல்ல தீரும் என்கிறார்கள் பெரியவர்கள்.

**பரிகாரம் 1**

பூர்வீக சொத்துக்களை பிரச்சனைகளை எதிர்கொள்பவர்கள், ஒவ்வொரு ஞாயிற்றுகிழமைகளில் காலை உணவு சாப்பிடுவதற்கு முன்பு, சிறிதளவு அரிசியையும், வெல்லத்தையும் கலந்து, கன்று போட்ட பசு மாட்டுக்கு உணவாக, கையாலேயே ஊட்டிவிட வேண்டும் என்பார்கள்..

**பரிகாரம் 2**

சொத்துக்களை இழந்து நிற்போர், அல்லது நியாயமாக வந்து சேர வேண்டிய சொத்துக்கள் கைக்கு வராமல் நிற்போர், அவசரத்துக்கு பணத்தை கடன் தந்துவிட்டு, அது மீண்டும் கைக்கு வராமல் நிற்போர், 27 பஞ்சமிகள் தினமும், மாலை நேரத்தில் சிவன் சன்னதியில் சிகப்பு திரியில் மண் அகலில் இலுப்பெண்ணெய் தீபம் 9 ஏற்றி வேண்டிக் கொள்ள வேண்டும். இந்த பரிகாரம் கடைப்பிடிக்கும்போது, அசைவ உணவை தவிர்ப்பது நல்லது.

**பரிகாரம் 3**

வாராகி அம்மனுக்கு 8 சனிக்கிழமை நாட்களில், காலை 6 முதல் 7மணி அல்லது இரவு 8 முதல் 9 மணி அளவில், மண் அகல் விளக்கில் கரு நீல துணியில், வெண் கடுகு முடிந்து நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபடுவதால், கைவிட்டு போன சொத்துக்களை மீண்டும் பெறலாம். சொத்து மட்டுமல்ல, இழந்துபோன செல்வம், புகழ், கௌரவம் என அனைத்தையும் திரும்ப பெற்றுவிடலாம்.

**பரிகாரம் 4**

நீண்ட காலமாகவே உங்களது சொந்த மனை, நிலத்தை விற்பனை செய்ய முடியாமல் இருந்தால், ஏதாவது ஒரு செவ்வாய்க்கிழமை உங்களது நிலத்தின் 4 முனைப்பகுதிகளிலும் கண்டங் கத்திரிக்காயை 4 துண்டாக வெட்டி எறிய வேண்டும். பின்னர் நிலத்தின்4 முனை பகுதியிலும் 4 தக்காளியை கசக்கி பிழிய வேண்டும். பிறகு சீரக தண்ணீரை 4 முனையிலும் தெளித்து, 4 முனையிலும் சிறு குழியை தோண்டி, முனை மழுங்கிய கத்திரிக்கோலை அதில் வைத்து மண்ணைப் போட்டு மூடிவிட வேண்டும். கடைசியாக, நிலத்தின் மீதான சிக்கல் விரைந்து தீர வேண்டும் என்று பிரார்த்திக் கொள்ள வேண்டும்.

**பரிகாரம் 5**

வெள்ளிக்கிழமைகளில் சாலையோரங்களில் இருக்கின்ற வயதான, ஆதரவற்ற நபர்களுக்கு ஒருவேளை உணவாவது வழங்கி வந்தாலும் பூர்வீக சொத்துக்களிலுள்ள பிரச்சினைகள் சுமூகமாக நீங்கும்.. அதேபோல, தினமும் மாலை 4.30 மணி முதல் 6 மணி வரையான பிரதோஷ வேளையில் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரை வழிபட்டு வந்தால் சட்ட சிக்கல் விரைவில் தீரும்.

**பரிகாரம் 6**

பூர்வீக சொத்துக்களில் பிரச்சனை இருந்தால், சிவப்பு நிற செம்பருத்தி பூவினை, மாலையாக கோர்த்து, அருகிலுள்ள அம்மன் கோயில்களிலுள்ள பெண் தெய்வங்களுக்கு சார்த்த வேண்டும். வெள்ளிக்கிழமைகளில் இப்படி அம்பாளுக்கு செம்பருத்தி பூக்களின் மாலையை போட்டு வணங்கி வருவதால் பூர்வீக சொத்தில் உள்ள சிக்கல்கள், இடர்பாடுகள், குறையும்.. அது தொடர்பான வழக்குகளும் உடனே முடிவுக்கு வரும்.

**பரிகாரம் 7**

பத்திரங்கள் தொடர்பான சிக்கல் ஏற்பட்டு, இதன்காரணமாக சொத்துக்கள் கைக்கு வராத பட்சத்தில், அருகிலுள்ள பச்சை அம்மன் கோவிலுக்கு சென்று, அம்மனுக்கு பச்சை நிற ஆடையை சாற்றி, பத்திரத்தின் நகலை அம்மனின் காலடியில் வைத்து வழிபடும்போது, சிக்கல்கள் தீரும்.

**பரிகாரம் 8**

பூர்வீக சொத்துக்களை மீண்டும் பெறுவதற்கு முருகப்பெருமானை நாடலாம்.. செவ்வாய்க்கிழமைகளில் திருச்செந்தூர் முருகப்பெருமானுக்கு தாம்பூல தட்டில் செவ்வரளி பூக்களால் 108 முறை, ஓம் என்ற மந்திரத்தால் அர்ச்சனை செய்து வழிபட்டு வருவதால், பூர்வீக சொத்துக்களை மட்டுமல்ல, இழந்த சொத்துக்களையும் பெற முடியும். பரிகாரம் 8 மாலை 4.30 மணி முதல் 6 மணி வரையான பிரதோஷ வேளையில் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரை வழிபட்டு வரும்போதும், செவ்வாய்க்கிழமைகளில் காலை 6 மணி முதல் 7 மணி வரையான செவ்வாய் ஓரையில் வீரபத்திரருக்கு வெற்றிலை மாலை அணிவித்து 9 நல்லெண்ணெய் தீபம் ஏற்றி 48 வாரம் வழிபட்டு வந்தாலும், சொத்து வழக்குகளில் நிலவும் சட்டரீதியான சிக்கல்கள் விரைந்து தீரும்.




## விலையுயர்ந்த கிரீம்கள் தேவையில்லை.. உங்கள் சருமம் பளபளப்பாக மாறும்..!




அழகான, பொலிவான சருமத்திற்காகப் பலர் விலை உயர்ந்த கிரீம்கள், சீரம்கள் மற்றும் அழகு சிகிச்சைகளை நம்பியிருக்கிறார்கள். இருப்பினும், ஆரோக்கியமான சருமத்திற்கு வெளிப்புறப் பொருட்களை விட உணவுப் பழக்கவழக்கங்களே மிகவும் முக்கியம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். சமீபத்திய ஆய்வு ஒன்று இந்தக் கருத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. குறிப்பாக, திராட்சை சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் நன்மை பயக்கும் என்று விஞ்ஞானிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.

சமீபத்தில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின்படி, ஒரு நாளைக்கு 3 முறை திராட்சை சாப்பிடுவது, சூரியனால் ஏற்படும் பாதிப்புகளை சருமம் ஓரளவிற்குத் தடுக்க உதவும். இந்த ஆய்வில் பங்கேற்ற தன்னார்வலர்கள் இரண்டு வாரங்களுக்குத் தினமும் திராட்சை சாப்பிட்டனர். பின்னர், ஆராய்ச்சியாளர்கள் அவர்களின் சரும செல்களில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்காணித்தனர்.


திராட்சைப்பழத்தை உட்கொண்ட பிறகு சருமத்தில் சில நேர்மறையான மாற்றங்கள் காணப்பட்டன. ஒரு பாதுகாப்பு கவசமாகச் செயல்படும் சருமத்தின் வெளிப்புற அடுக்கு வலுப்படுத்தப்பட்டிருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்தைக் குறிக்கும் மலோன்டியால்டிஹைடின் அளவுகள் குறைந்திருப்பதும் கண்டறியப்பட்டது. இதன் பொருள், சருமத்தில் ஃப்ரீ ரேடிக்கல்களின் தாக்கம் குறைந்து, ஆரோக்கியம் மேம்படுகிறது என்பதாகும்.

இந்த ஆராய்ச்சியை வழிநடத்திய நிபுணர்கள் திராட்சையை ஒரு "சூப்பர்ஃபுட்" என்று விவரித்துள்ளனர். திராட்சையில் உள்ள ஊட்டச்சத்துக்கள் சருமத்திற்கு மட்டுமல்லாமல், கல்லீரல், தசைகள், சிறுநீரகங்கள் மற்றும் மூளை போன்ற பிற உறுப்புகளின் செயல்பாட்டிலும் நேர்மறையான விளைவை ஏற்படுத்தக்கூடும் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

ஒரு நாளைக்கு மூன்று முறை ஒரு கப் திராட்சையை உட்கொள்ளுமாறு நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர். அவற்றை அப்படியே சாப்பிடலாம். அவற்றை பழ சாலட்களிலும் சேர்க்கலாம் அல்லது ஆரோக்கியமான சிற்றுண்டியாக உறைய வைக்கலாம். இருப்பினும், திராட்சை சாப்பிடுவதை சன்ஸ்கிரீனுக்கு முழுமையான மாற்றாகக் கருதக்கூடாது. ஆனாலும், சூரிய ஒளி மற்றும் மாசுபாடு போன்ற சுற்றுச்சூழல் காரணிகளுக்கு எதிராக அவை கூடுதல் பாதுகாப்பை வழங்க முடியும். அதனால்தான், இயற்கையாகவே பொலிவான சருமத்தைப் பெற விரும்புபவர்கள், தங்கள் தினசரி உணவில் திராட்சையைச் சேர்த்துக் கொண்டால் பல ஆரோக்கிய நன்மைகளைப் பெறலாம் என்று நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.




## எஸ்.ஜே.சூர்யாவின் கில்லர் படப்பிடிப்பில் பயங்கர விபத்து..!



பிரபல இயக்குனரும் நடிகருமான எஸ்.ஜே. சூர்யா 10 ஆண்டுகளுக்கு பிறகு கில்லர் என்ற படத்தை நடித்து இயக்கி வருகிறார். இந்த படத்தில் ப்ரீத்தி அஸ்ராணி நாயகியாக நடிக்கிறார்.. இந்த படத்தின் படப்பிடிப்பு சென்னை பெரம்பூரில் உள்ள பின்னி மில் வளாகத்தில் இன்று நடந்தது.. அப்போது அங்கு வைக்கப்பட்டிருந்த சிலிண்டர் வெடித்து சிதிறி பயங்கர விபத்து ஏற்பட்டது.. இந்த விபத்தில் சிக்கிய மதன் என்ற 25 வயது இளைஞர் பலத்த காயமடைந்து உயிரிழந்தனர்.. இந்த விபத்தில் மேலும் 3 பேர் காயமடைந்தனர்.. அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்..

# தமிழ்நாட்டின் டிஜிபியாக மகேஷ் குமார் அகர்வால்!

சென்னை, ஜூன். 03–

தமிழக காவல்துறையின் 34வது டிஜிபியாக மகேஷ்குமார் அகர்வால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மகேஷ் குமார் அகர்வால் பஞ்சாப் மாநிலத்தில் பிறந்தவர்.

சட்டம்– ஒழுங்கு பணியில் மிகுந்த அனுபவம் கொண்டவர் மகேஷ் குமார். 1994ம் ஆண்டு ஐபிஎஸ் பேட்ச் அதிகாரி மகேஷ் குமார் அகர்வால். சட்டப்பிரிவில் பிஏ பட்டமும், வழக்கறிஞருக்கான சட்டப்படி ப்பும் படித்தவர்.

தமிழ், ஆங்கிலம், இந்தி, பஞ்சாபி ஆகிய மொழிகளை நன்கு அறிந்தவர். சென்னை பூக்கடை காவல்துறை துணை ஆணையராக 3 ஆண்டுகள் பணிபுரிந்தவர்



சென்னை போக்குவரத்து துணை ஆணையர், தூத்துக்குடி எஸ்பி ஆக இருந்தவர். சிசிடிவி கேமராக்களை சென்னை நகரில் நிறுவ வலது கரமாக செயல்பட்டவர்.

நைட் கிரைம் டு ஜீரோ என்ற திட்டத்தை காவல்துறையில் அறிமுகப்படுத்தியவர். சேலம் ரெயில் கொள்ளை வழக்கு உள்ளிட்ட முக்கிய வழக்குகளை கையாண்டவர். மெச்சத்தகுந்த பணிக்காக முதலமைச்சரின் பதக்கத்தைப் பெற்றவர் மகேஷ் குமார்.

# தோல்வி எதிரொலி; கருணாநிதி பிறந்த நாள் கூட்டம் ரத்து!

சென்னை, ஜூன். 03–

மறைந்த கருணாநிதியின் 103வது பிறந்த நாள் விழா, தி.மு.க., சார்பில், இன்று கொண்டாடப்படுகிறது. சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள தி.மு.க., இளைஞரணி தலைமை அலுவலகமான அன்பகத்தில், 75 அடி உயர கம்பத்தில், தி.மு.க., கொடி ஏற்றப்படுகிறது. ஆண்டுதோறும் கருணாநிதி பிறந்த நாளை ஒட்டி, சென்னை மாவட்ட தி.மு.க., சார்பில், பொதுக்கூட்டம் நடத்துவது வழக்கம். கருணாநிதி இருந்தபோது, தி.மு.க., பொதுக்குழு கூட்டம் மற்றும் மாவட்டச் செயலர்கள் கூட்டம் நடத்தப்படும்; மறுநாள் பிறந்த நாள் பொதுக்கூட்டம் நடத்தப்படும். பொதுக்கூட்டத்திற்கு, கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், தேசிய கட்சிகளின் தலைவர்கள்



அழைக்கப்படுவது வழக்கம். ஆனால், சட்டசபை தேர்தலில் தி.மு.க., தோல்வியடைந்து ஆட்சியை இழந்தது.

கூட்டணியில் இருந்த காங்கிரஸ், வி.சி.க., கம்யூனிஸ்டுகள், முஸ்லிம் லீக் போன்ற கட்சிகள், முதல்வர் விஜய் தலைமையிலான த.வெ.க., பக்கம் சென்று விட்டன. இதனால், இந்த ஆண்டு, கருணாநிதி பிறந்த நாள் பொதுக்கூட்டத்தை, தி.மு.க., தலைமை ரத்து செய்து விட்டது.

# EPFO 3.0 | UPI மூலம் பணத்தை எடுக்கும் வசதி அறிமுகம்!

புதுடெல்லி, ஜூன். 03–

ஊழியர்கள் தங்களின் வருங்கால வைப்பு நிதியை திரும்ப பெறுவதற்கான கால அளவு 7 முதல் 10 நாட்கள் வரை இருந்தது. தற்போது புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள EPFO 3.0 கட்டமைப்பில்,

இந்த கால அளவு குறைக்கப்பட்டு சில வினாடிகளில் பணத்தை எடுக்கும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் பணம் எடுக்கும்போது சரியான ஆவணங்கள் இல்லாமல் நிராகரி க்கப்படுவது மற்றும் நீண்ட தாமதமான பணப்பரிவர்த்தனை உள்ளிட்ட சிக்கல்களை EPFO 3.0 நேரடியாக சரி செய்கிறது.

தற்போது மேம்படுத்தப்பட்டுள்ள சேவை மூலம் உறுப்பினர்கள் தங்களின் பணத்தை எடுப்பதற்கு தகுதியான இருப்பை UMANG செயலி தெளிவாக காண்பிக்கும். இதன்மூலம் ஊழியர்கள் தங்களின் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக பணத்தை அனுப்ப முடியும். UPI வசதி கொண்ட ATM–இல் பணத்தை எடுத்துக் கொள்ளும் வகையிலும் இந்த சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் தங்களின் ஓய்வூதிய சேமிப்பை பாதுகாப்பதை உறுதி செய்வதற்காக, மொத்த நிதியில் 25 சதவீதப் பகுதி எப்போதும் PF கணக்கில் வைப்பு வைக்கப்படுகிறது.




உறுப்பினர்கள் தங்களின் இருப்பில் உள்ள 50 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான தகுதியான பகுதியை மட்டுமே UPI அல்லது ATM மூலம் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ள சேவை மூலம் எடுக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் பிறந்தநாள் விழா; தி.மு.க.வினர் அன்னதானம் வழங்கி கொண்டாட்டம்!



ஆண்டிபட்டி ஜூன் 03–

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் தி.மு.க.வினர் அன்னதானம் வழங்கி முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 103 வது பிறந்தநாளை விமர்சியாக கொண்டாடினார்கள்.

ஆண்டிபட்டி– தேனி சாலையில் அமைக்கப்பட்ட முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவபடத்திற்கு, எம்.எல்.ஏ.மகாராசன் மலர்தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.டி.சுப்புலாபுரம் கிராமத்தில் கிளை செயலாளர் தங்க விநாயகம் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு அன்னதானமாக பிரியாணியை எம்.எல்.ஏ.மற்றும் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் ஆகியோர் வழங்கினார்கள்.பிறந்தநாள் நிகழ்ச்சியில் பேரூர் செயலாளர் சரவணன்.எஸ்.டி.சிவா, அர்ச்சுணன், மலைச்சாமி உள்பட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஜூன் 4-ல் தென்மேற்கு பருவமழை!


புதுடில்லி, ஜூன். 03–

'இந்த ஆண்டுக்கான தென்மேற்கு பருவமழை கேரளாவில் ஜூன் 4ல் துவங்கக்கூடும்' என, இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஆண்டுதோறும் பொதுவாக ஜூன் 1–ம் தேதி கேரளாவில் தென்மேற்கு பருவமழை துவங்கும். இந்த மழைக்காலம் செப்டம்பர் வரை நீடிக்கும். ஆனால், இந்த ஆண்டு பருவமழை துவங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. முதலில் கணிப்பு வெளியிட்ட இந்திய வானிலை மையம், மே 26–ம் தேதியே கேரளாவுக்கு பருவமழை துவங்கும் என, அறிவித்திருந்தது. ஆனால், 'எல் நினோ' எனப்படும், பசிபிக் பெருங்கடலில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தின் காரணமாக முந்தைய கணிப்பை மாற்றியது.

இது குறித்து இந்திய வானிலை மையம் இன்று வெளியிட்ட அறிக்கை: தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகள், லட்சத்தீவுகள், கேரளா மற்றும் தமிழகம் ஆகிய பகுதிகளில் தென்மேற்கு பருவமழை ஜூன் 4ல் துவங்குவதற்கான சாதகமான சூழல் நிலவுகிறது.

அதே நேரத்தில் வங்க கடலின் தென்மேற்கு, மத்திய மேற்கு, மத்திய கிழக்கு, வடகிழக்கு மற்றும்



தென்கிழக்கு பகுதிகளிலும் பருவமழை தீவிரமடையும். இதன் காரணமாக தமிழகம், ஆந்திரா, ஒடிஷா மாநிலங்களில் மழை பெய்யக்கூடும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881





## Sashastra Seema Bal (SSB) வேலைவாய்ப்புகள் 2026!




Sashastra Seema Bal என்பது உள்துறை அமைச்சகத்தின் (MHA) கீழ் செயல்படும் மத்திய ஆயுத காவல் படையாகும். 2026 ஆம் ஆண்டில் பல்வேறு பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்பு அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

தற்போது நடைபெறும் முக்கிய ஆட்சேர்ப்புகள்

Notification No: 541/RC/SSB/CT(GD)SQ–2025/2026

1.Constable (GD) Sports Quota

காலியிடங்கள்: 404

கல்வித் தகுதி: 10ஆம் வகுப்பு (Matriculation)

விண்ணப்ப இறுதி தேதி: 07 ஜூன் 2026.

2.Constable (GD) Remusteration

விண்ணப்ப காலம்: 22 மே 2026 முதல் 20 ஜூன் 2026 வரை.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கான சிறப்பு ஆட்சேர்ப்பு.

3.Head Constable (Non–GD)

பல்வேறு தொழில்நுட்ப மற்றும் நிர்வாகப் பிரிவுகள்.

பொதுவாக 12ஆம் வகுப்பு தகுதி தேவைப்படும்.

4.Constable (Tradesman)

Carpenter, Plumber, Cook, Washerman, Barber, Tailor போன்ற தொழிற்பிரிவுகள்.

மொத்த காலியிடங்கள் 800–க்கும் மேல் அறிவிக்கப்பட்டுள்ளன.

வயது வரம்பு

பொதுவாக 1823 வயது (Constable GD)

சில Head Constable/Technical பணிகளுக்கு 1827 வயது

SC/ST/OBC பிரிவினருக்கு அரசு விதிப்படி வயது தளர்வு உண்டு.

தேர்வு முறை

Physical Efficiency Test (PET)

Physical Standard Test (PST)

எழுத்துத் தேர்வு

ஆவணச் சரிபார்ப்பு

மருத்துவ பரிசோதனை.

அதிகாரப்பூர்வ விண்ணப்ப தளம்

SSB Recruitment Portal

Official Website: https://recruitment.ssb.gov.in/

# வேலை வாய்ப்பு

## இந்திய அறிவியல் கழகம் (IISc), பெங்களூரு, வேலைவாய்ப்புகள் (2026)




Indian Institute of Science தற்போது பல்வேறு நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான பணியிடங்களுக்கு விண்ணப்பங்களை வரவேற்கிறது.

முக்கிய காலிப்பணியிடங்கள்

Administrative Assistant (நிர்வாக உதவியாளர்)

ஆன்லைன் விண்ணப்பம்: 29 மே 2026 18 ஜூன் 2026

தேர்வு: Aptitude Test + ஆவண சரிபார்ப்பு

பட்டப்படிப்பு தகுதி பொதுவாக தேவை.

Deputy Administrative Officer

Deputation முறையில் ஆட்சேர்ப்பு.

விண்ணப்ப இறுதி தேதி: 15 ஜூன் 2026.

Senior Engineer / Project Associate பணியிடங்கள்

Civil மற்றும் Electrical துறைகளில் பல இடங்கள்.

மொத்தம் சுமார் 35 காலியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

Program Assistant / Project Assistant

பல்வேறு ஆராய்ச்சி மையங்கள் மற்றும் திட்டங்களில் ஒப்பந்த அடிப்படையிலான பணியிடங்கள்.

Faculty & Research Positions

Assistant Professor, Associate Professor, Professor மற்றும் Postdoctoral Fellow பணியிடங்கள் தொடர்ந்து திறந்திருக்கும்.

அதிகாரப்பூர்வ வேலைவாய்ப்பு பக்கங்கள் – https://iisc.ac.in/

## திருப்பத்தூர் மாவட்ட சுகாதார சங்கம் (District Health Society – DHS) வேலைவாய்ப்புகள்!




திருப்பத்தூர் மாவட்ட சுகாதார சங்கம் (District Health Society – DHS) வேலைவாய்ப்புகள்

திருப்பத்தூர் மாவட்ட இணையதளத்தில் தற்போது "District Health Society கீழ் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு" வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க கடைசி தேதி 13 ஜூன் 2026 ஆகும்.

முக்கிய தகவல்கள்

நிறுவனம்: District Health Society (DHS), Tirupathur

பணியிடங்கள்: பல்வேறு சுகாதாரத் துறை மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான பணியிடங்கள்

விண்ணப்பிக்கும் முறை: பொதுவாக ஆஃப்லைன் / அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட முறையில்

கடைசி தேதி: 13–06–2026

அதிகாரப்பூர்வ Official Website: https://tirupathur.nic.in/

## ராமநாதபுரம் மாவட்ட சுகாதார சங்கம் (District Health Society – DHS) வேலைவாய்ப்புகள்!




நிறுவனத்தின் பெயர்: இராமநாதபுரம் மாவட்ட சுகாதார சங்கம்

பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 08 ICTC ஆலோசகர்கள், ICTC ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் பணியிடங்கள்

பணியிட மாற்றம்: இராமநாதபுரம்

தொடங்கும் தேதி: 02.06.2026

கடைசி தேதி: 16.06.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://Ramanathapuram.nic.in/

## DRDO Gas Turbine Research Establishment (GTRE), பெங்களூரு வேலைவாய்ப்பு 2026!




Defence Research and Development Organisation–இன் கீழ் செயல்படும் Gas Turbine Research Establishment தற்போது Apprentice Trainee பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பணியின் பெயர்

Apprentice Trainee (Technical & Non–Technical)

காலியிடங்கள்

மொத்தம் 150 பணியிடங்கள்.

கல்வித் தகுதி

பின்வரும் தகுதிகளில் ஏதேனும் ஒன்று பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்:

ITI /Diploma/ B.E / B.Tech/B.Sc/B.Com/B.A/BCA/BBA

வயது வரம்பு

குறைந்தபட்ச வயது: 18/ அதிகபட்ச வயது: 28 அரசு விதிப்படி வயது தளர்வு உண்டு.

பணியிடம்

பெங்களூரு, கர்நாடகா (CV Raman Nagar)

தேர்வு முறை

Walk–in Interview

ஆவணச் சரிபார்ப்பு

முக்கிய தேதிகள்

அறிவிப்பு வெளியீடு: 12–05–2026

Walk–in Interview: 06–06–2026 (சனிக்கிழமை)

Reporting Time: காலை 9:00 மணி.

விண்ணப்பக் கட்டணம்

கட்டணம் இல்லை.

அதிகாரப்பூர்வ DRDO வேலைவாய்ப்பு பக்கம்

DRDO Vacancies Portal

Apply Mode: Offline




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு ஆசிரியர் சங்கங்கள் மற்றும் அரசு ஊழியர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் (ஜாக்டோ–ஜியோ) மாநில ஒருங்கிணைப்பாளர்கள் கு. வெங்கடேசன், கு. தியாகராஜன், மு. பாஸ்கரன், வெ. சோமசுந்தரம், திரு. இரா. சத்தியமூர்த்தி மற்றும் நிர்வாகிகள் சந்தித்துப் பேசினர்.




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் (TNGEA) மாநிலத் தலைவர் மு. பாஸ்கரன், பொதுச் செயலாளர் வெ. சோமசுந்தரம், மாநிலப் பொருளாளர் சா. டானியல் ஜெயசிங் மற்றும் நிர்வாகிகள் சந்தித்துப் பேசினர்.




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்யை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு அலுவலர்கள் சங்கத்தின் (TNGOU) மாநிலத் தலைவர் டி. அமிர்தகுமார், மாநில பொருளாளர் வி. திரவியத்தம்மாள், மாநில துணைத் தலைவர்கள் ஆர்.சி.எஸ். குமார், இ. ஜெயபால், மாநில மகளிர் அணிச் செயலாளர் எம். மணிமேகலை உள்ளிட்ட நிர்வாகிகள் சந்தித்துப் பேசினர்.

# டெல்லியில் அண்ணாமலை... நயினார்க்கு அழைப்பு!

சென்னை, ஜூன். 03–

தமிழக பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை, கட்சியில் இருந்து விலகி புதிய கட்சியைத் தொடங்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.



இந்தநிலையில் பாஜக தேசியத் தலைவர் நிதின் நபினைச் சந்தித்து, அண்ணாமலை தனது 5 பக்க ராஜிநாமா கடிதத்தை வழங்கியதாகவும் தொடர்ந்து டெல்லியில் மத்திய உள்துறை மந்திரி அமித் ஷாவை அவரது இல்லத்தில் சந்தித்து இதுபற்றி விளக்கமளித்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனுக்கு டெல்லி பாஜக தலைமை அழைப்பு விடுத்தது. இதனையடுத்து திருவனந்தபுரம் வழியாக நயினார் நாகேந்திரன் உடனடியாக டெல்லி புறப்பட்டு சென்றார்.

தமிழக பாஜக மற்றும் நயினார் நாகேந்திரன் குறித்து அண்ணாமலை பல விஷயங்களைப் பேசியதாகக் கூறப்படும் நிலையில், அதுபற்றியும் பாஜகவின் அடுத்தகட்ட நகர்வு பற்றியும் நயினார் நாகேந்திரனிடம் பாஜக தலைமை ஆலோசிக்க உள்ளதாக கூறப்படுகிறது.

**ராஜினாமா கடிதம் ஏற்க மறுப்பு**

அண்ணாமலை சமர்பித்த ராஜினாமா கடிதத்தை பாஜக தலைமை ஏற்க மறுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. தமிழகத்தில் அண்ணாமலைக்கு என்று ஒரு தனிப்பட்ட இளைஞர் படையும், தீவிரமான ஆதரவாளர் வட்டமும் உருவாகியுள்ளது. அவர் முற்றிலும் கட்சியை விட்டு வெளியேறினால், அது தமிழகத்தில் பாஜகவின் வளர்ச்சியைப் பல ஆண்டுகள் பின்னோக்கித் தள்ளிவிடும் எனத் தேசியத் தலைமை அஞ்சுவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

**அண்ணாமலைக்கு முக்கிய பொறுப்பு?**

அவரைத் தொடர்ந்து கட்சியிலேயே தக்கவைத்துக்கொள்ளும் பொருட்டு, தேசிய அளவில் ஒரு முக்கிய பொறுப்பு வழங்கப்படலாம் எனத் தெரிகிறது. இதற்கு முன்னரே அண்ணாமலைக்கு தேசிய பொறுப்புகள் வழங்கப்படலாம் என தகவல்கள் பரவியது. ஆனால் எந்த விதமான பதவியும் வழங்கப்படவில்லை.

அண்ணாமலையின் இந்த பிடிவாதமான முடிவைத் தொடர்ந்து, தற்போதைய தமிழகத் தலைவர் நயினார் நாகேந்திரனும் அவசரமாக டெல்லி புறப்பட்டு சென்றுள்ளார். அமித்ஷா முன்னிலையில் இரு தரப்பையும் அமர வைத்துச் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த கட்சி மேலிடம் திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளது. அண்ணாமலை தனது முடிவில் உறுதியாக இருப்பாரா அல்லது டெல்லியின் சமாதானத் திட்டத்திற்கு பச்சை கொடி காட்டுவாரா? என்பது இன்னும் 24 மணி நேரத்தில் தெளிவாகத் தெரிந்துவிடும்.

# அண்ணாமலை தனிக்கட்சி: ரஜினி ரசிகர்கள் ஆதரவு?

மதுரை, ஜூன். 03–

அண்ணாமலை தனிக்கட்சித் துவங்க உள்ளதாக சில மாதங்களாகவே செய்தி பரவியது. பா.ஜ.,வில் மாநில தலைவர் பதவி பறிப்புக்குப் பின் குறிப்பிடத்தக்க பொறுப்பு எதுவும் அவருக்கு வழங்காத நிலையில், விரக்தியில் இருந்த அவர் தற்போது தனிக்கட்சி துவக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.




ஆளும்கட்சிக்கு சிம்ம சொப்பனம் தற்போது நடிகர் விஜய் த.வெ.க., கட்சியை துவக்கி முதல் தேர்தலிலேயே ஆட்சியைப் பிடித்து முதல்வராகவும் ஆகிவிட்டார். இதனால் தமிழக அரசியலில் தற்போது இளைஞர்களிடையே புதிய சிந்தனை ஏற்பட்டுள்ளதாக கருதுகின்றனர். ஒன்றுமே இல்லாமல் வலிமை இழந்த நிலையில் இருந்த பா.ஜ.,வுக்கு எழுச்சியூட்டிய அனுபவம் அண்ணாமலைக்கு உள்ளது. எனவே அவர் தனிக்கட்சி துவங்க வேண்டும் என்று ஆதரவாளர்கள் விரும்புகின்றனர்.

மதுரையை சேர்ந்த ஆதரவாளர், பா.ஜ., நிர்வாகி விஷ்ணுபிரசாத் கூறுகையில், ''அண்ணாமலை எடுக்கும் எந்த முடிவுக்கும் கட்டுப்படுவோம். தனிக்கட்சி துவக்கினால் அதற்கான பணியை சிறப்பாக செயல்படுத்துவோம். அவரும் ஆளும்கட்சியின் தவறுகளை தட்டிக்கேட்டு, சிம்மசொப்பனமாக திகழ்வார். வருகிற தேர்தலில் அவரை முதல்வராக்க உழைப்போம். எங்களுக்கு ரஜினி ரசிகர்கள் பலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்'' என்றார்.

இவர் 'சிங்கம் ஒன்று புறப்பட்டதே' என்ற பாடல் வரிகளுடன் ரஜினியுடன் அண்ணாமலை இருப்பது போன்ற போஸ்டர்களை மதுரையில் ஒட்டியுள்ளார். அண்ணாமலையின் பிறந்தநாள், கட்சி துவக்கம் ஆகிய காரணங்களுக்காக மதுரை ஆதரவாளர்கள் விஷ்ணுபிரசாத், முன்னாள் எம்.எல்.ஏ., சோழன் பழனிசாமி, பாலமுருகன், கும்பகோணம் ராஜாமணிகண்டன், பி.எல். அண்ணாமலை ஆகியோர் தஞ்சை பகுதி கோயில்களில் சிறப்பு வழிபாடு நடத்தியுள்ளனர்.

விலகும் பா.ஜ., நிர்வாகிகள்

இதேபோல திருமங்கலம் நிர்வாகிகள் சிலர் கூறுகையில், 'மதுரை கிழக்கு, மேற்கு மாவட்டங்களில் பா.ஜ., வின் பல்வேறு பிரிவுகளின் நிர்வாகிகள் பலர் மொத்தமாக அண்ணாமலைக்காக கட்சியில் இருந்து விலகும் முடிவில் உள்ளனர். நெல்லையில் அண்ணாமலையின் பெயரில் ரசிகர் மன்றம் துவக்கிய நிர்வாகிகள் சிலர் (ஜூன் 4) மதுரை திருமங்கலத்தில் பல்வேறு பிரிவு நிர்வாகிகளுடன் தனியாக கூட்டம் நடத்தி அண்ணாமலையின் தனிக்கட்சிக்கு ஆதரவு தெரிவிக்க உள்ளனர். அவரது பிறந்தநாள் மற்றும் அரசியல் வெற்றிக்காக மாலையில் திருப்பரங்குன்றத்தில் தங்கத்தேர் இழுக்க பதிவு செய்துள்ளனர். ஜூன் 7ல் நற்பணியாக பொதுத் தேர்வில் வென்ற மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்க உள்ளனர்' என்றனர்.

# எந்த இடைத்தேர்தலிலும் போட்டியிட மாட்டேன்: திருமாவளவன் திட்டவட்டம்!

சென்னை , ஜூன் 03–

தமிழகத்தில் நடைபெற உள்ள எந்த இடைத்தேர்தலிலும் போட்டியிட மாட்டேன் என திருமாவளவன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக விசிக தலைவர் திருமாவளவன் முகநூலில் வெளியிட்ட வீடியோவில் பேசியதாவது: தேர்தலுக்கு முன் அதிமுக, தவெகவுடன் கூட்டணி அமைக்கலாம் என பலர் என்னிடம் கூறினர். ஆனால் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியை உருவாக்கியதில் விசிகவுக்கு பங்கு உண்டு. அரசியலில் நேர்மை, தூய்மை இருக்க வேண்டும் என்பதனாலும், நம்மால் கூட்டணி சிதறிவிட்டது என இருக்கக்கூடாது என்பதாலும் கூட்டணியில் தொடர்ந்தோம்.



தேர்தலுக்கு பின் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்டுக்கோப்பாக இல்லை, சிதறிவிட்டது. அதற்கான காரணங்களை கண்டறியாமல் நாம் கடைசி நேரத்தில் எடுத்த முடிவை அனைவரும் விமர்சிக்கின்றனர். நான் பதவிக்கு ஆசைப்படுகிறேன் என கூறுகின்றனர். பதவி ஆசை இருந்திருந்தால் பாஜ அமைச்சரவையில் இடம்பெற வாய்ப்பு கிடைத்த போது அதை பயன்படுத்தியிருக்க மாட்டேனா? இந்த தேர்தலில் நான் போட்டியிட ஆசைப்பட்டேன், அதனால் காட்டுமன்னார்கோவிலில் போட்டியிட முடிவு எடுத்தேன்.

பின்னர் அது கூட்டணியை பலவீனப்படுத்தும் என கூறப்பட்டதால் பின் வாங்கினேன். ஆனால் ஆதவ் அர்ஜுனா கூட திருமாவளவன் தேர்தலுக்கு முன்பே கூட்டாக செயல்பட்டார் என அவதூறுகளை பரப்பி வருகின்றனர். இதோடு மட்டுமில்லாமல் திருமாவளவன் தடுமாறுகிறார் என தலைமையை பலவீனப்படுத்தும் முயற்சிகளையும் முன்னெடுக்கின்றனர். விசிக இரண்டு தொகுதிகள் வெற்றி பெற்றிருந்தாலும் அது திமுக கூட்டணியின் வெற்றி தான்.

நான் அமைச்சரவையில் பங்கேற்க வேண்டும் என்று தவெகவில் இருந்து அழைப்பு வந்தது. திருச்சி கிழக்கு இடைத்தேர்தலில் போட்டியிடலாம் என்றும் கூறினர். ஆனால் வன்னியரசுவின் வாய்ப்பு பறிக்கப்படும் என்ற காரணத்தினாலும், நான் உறுதியாக முடிவெடுத்ததாலும் அதை ஏற்கவில்லை. இப்போதும் திருச்சி கிழக்கில் திருமாவளவன் போட்டியா என பேசுகின்றனர். நான் எந்த இடைத்தேர்தலிலும் போட்டியிட மாட்டேன். ஏற்கனவே இதை முதல்வர் விஜய்யிடம் தெளிவுபடுத்திவிட்டேன். இவ்வாறு அவர் பேசினார்.

# 2027 மார்ச்சில் உள்ளாட்சி தேர்தல்!

சென்னை, ஜூன். 03–

தமிழகத்தில், 2027ல் உள்ளாட்சி தேர்தல் வர உள்ளதையொட்டி, வார்டு மறுவரையறை பணிகளை விரைந்து முடிக்க, மாநில தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில தேர்தல் கமிஷனர் மற்றும் எல்லை மறுவரையறை ஆணைய தலைவர் ஜோதி நிர்மலா சாமி தலைமையில், எல்லை மறுவரையறை ஆணைய கூட்டம், தேர்தல் ஆணைய அலுவலகத்தில் நடந்தது.

இதில், 11 மாவட்ட ஊராட்சிகள், 40 ஊராட்சி ஒன்றியங்கள், 177 கிராம ஊராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல், அதன் தொடர்புடைய வார்டு எல்லை மறுவரையறை செய்தல் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

வார்டு எல்லை மறுவரையறை நிர்ணய பணிகளை விரைந்து முடிக்க, ஆணைய தலைவர் ஜோதி நிர்மலா சாமி உத்தரவிட்டுள்ளார். அதன்படி, 11 மாவட்ட ஊராட்சிகள், 40 ஊராட்சி ஒன்றியங்கள், 177 கிராம ஊராட்சி ஒன்றியங்களில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயம் செய்து, அரசுக்கு பரிந்துரை செய்ய உள்ளனர்.

தமிழகத்தில் ஏற்கனவே, கிராம உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் பிரதிநிதிகள் பதவிக் காலம் முடிவடைந்த பின், சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு, 2027 பிப்., மாதம் வரை பதவிக் காலம் இருக்கிறது. அதற்கு வார்டு மறுவரை பணிகளை முடித்து, 2027 மார்ச் மாதத்தில் உள்ளாட்சி தேர்தல் நடத்த, மாநில தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

# கர்நாடகாவில் மீண்டும் அதிகார சண்டை!

பெங்களூரு, ஜூன். 03–

கர்நாடகாவின் புதிய முதல்வராக டி.கே.சிவகுமார் இன்று பதவி ஏற்க உள்ள நிலையில், காங்கிரஸ் கட்சிக்குள், துணை முதல்வருக்கான போட்டி பூதாகரமாகி இருக்கிறது. அதுவும் மூத்த தலைவர்களுக்குள் இல்லாமல், அவர்களது வாரிசுகளுக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது.

கர்நாடகாவில் காங்., மேலிடம் தலையிட்டதால், முதல்வர் மாற்றம் சுமுகமாக முடிந்து இருக்கிறது. சித்தராமையா – டி.கே.சிவகுமாருக்கு இடையே நீண்ட காலமாக நீடித்து வந்த சண்டைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இதனால், கர்நாடகாவின் புதிய முதல்வராக டி.கே.சிவகுமார் பதவியேற்கவுள்ளார். இந்தச் சூழலில், துணை முதல்வர் பதவி யாருக்கு என்பதில் சித்தராமையாவின் இளைய மகன் யதீந்திராவுக்கும் காங்., தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவின் மகன் பிரியங்க் கார் கேவுக்கும் இடையே நேரடி போ ட்டி நிலவுகிறது .

சித்தராமையாவின் மகன் யதீந்திரா, 2018ல் தேர்தல் அரசியலுக்குள் நுழைந்தவர். தந்தை சித்தராமையாவின் வருணா தொகுதியில் போட்டியிட்டு எம்.எல்.ஏ., ஆனார். 2024ல் சட்ட மேல்சபை உறுப்பினராக பொறுப்பேற்றார்.

அதன் பின், திரைமறைவில் இருந்தபடி கட்சியை பலப்படுத்துவதிலும், தந்தையின் அரசியல் நகர்வுகளுக்கும் உறுதுணையாக இருந்தார்.



இதனால், சித்தராமையாவின் ராஜினாமாவுக்கு பின், அமைச்சரவையிலோ அல்லது அதிகார மையத்தின் முக்கிய பொறுப்பிலோ அவர் அமரவைக்கப்படலாம் என்ற பேச்சுகள் எழுந்தன.

அதே போல், கர்நாடக காங்., முகாமில் பிரியங்க் கார்கேவும் தனக்கென தனி செல்வாக்கை உருவாக்கி இருக்கிறார்.

காங்., தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவின் மகனான பிரியங்க், 2013ல் முதல் முறையாக சித்தாபூர் எம்.எல்.ஏ.,வாக தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து மூன்று முறை எம்.எல்.ஏ.,வாக தேர்வான பிரியங்க், காங்., அமைச்சரவையில் தகவல் தொழில்நுட்பம், ஊரக வளர்ச்சி மற்றும் சமூக நலத்துறை என, பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்து இருக்கிறா ர்.

யதீந்திராவை போல அல்லாமல் , பிரியங்க் தனக்கென தனி முத்திரையை பதித்தவர். ஏற்கனவே, அமைச்சர் பதவியை வகித்தவர் என்பதால், மக்கள் மத்தியிலும் பிரபலமாக இருக்கிறார்.

இதனால், தன் குடும்ப செல்வாக்கை மீறி, தனி அரசியல் அடையாளத்தை உருவாக்கி வைத்துள்ளார்.

இது தவிர, துணை முதல்வர் பதவி என்றாலே, பட்டியல் இனத்தவருக்கு தான் தர வேண்டும் என காங்., கட்சியில் பரவலாக பேச்சு அடிபடுகிறது.

அந்த வகையிலும், பிரியங்க் கார்கே பட்டியலினத்தை சேர்ந்தவர் என்பதால், துணை முதல்வர் போட்டியில் இவரது பெயர் பலமாக அடிபடுகிறது.


எனினும், இந்த தருணத்தில், சித்தராமையாவின் அதிருப்தியை சம்பாதித்து விடக்கூடாது என்பதில் காங்., மேலிடம் உறுதியாக உள்ளது. இதனால், இருவரையுமே துணை முதல்வர் பதவியில் அமர வைக்கலாமா என்ற யோசனையில் காங்., மேலிடம் மூழ்கி இருக்கிறது. ஒருவேளை ஒன்றுக்கும் மேற்பட்ட துணை முதல்வர்கள் பதவி உருவாக்கப்படுமானால், நீண்ட நாள் கனவுடன் முதல்வராக பதவியேற்கவுள்ள டி.கே.சிவ குமாருக்கு அது பெரும் சிக்கலை ஏற்படுத்தக் கூடும்.

அடுத்த தலைமுறை தலைவர்களை உருவாக்கும் முனைப்பில் உள்ள காங்., மேலிடத்துக்கு இந்த விவகாரம் பெரும் தலைவலியை ஏற்படுத்தி உள்ளது.

# பரந்தூர் ஏர்போர்ட் அவசியம் - விமான நிலைய ஆணையம் திட்டவட்டம்!

சென்னை, ஜூன் 03–

கடந்த திமுக ஆட்சியில் காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் 5,600 ஏக்கர் பரப்பளவில் புதிய சர்வதேச விமான நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் தினசரி 60,000க்கும் மேற்பட்ட பயணிகள் மற்றும் 400க்கும் மேற்பட்ட விமான போக்குவரத்து நடந்து வருகிறது.



**பரந்தூர் திட்டம்**

ஆனால் விமானத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரிப்பதால் நெருக்கடியை சமாளிக்க பரந்தூர் திட்டம் கொண்டுவரப்பட்டது.

மேலும் பரந்தூர் விமான நிலையத்துடன் அதனை சுற்றி நவீன சரக்குக் கிடங்குகள், ஏற்றுமதி, இறக்குமதி மையங்கள், பன்னாட்டு நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்கள் அடங்கிய 'ஏரோட்ரோபோலிஸ்' நகரம் ஒன்றை உருவாக்க திட்டமிடப்பட்டது. இதனால் சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களின் தொழில் வளர்ச்சி பல மடங்கு அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டது.

இந்த ஒட்டுமொத்த திட்டத்திற்காக ஏற்கனவே 3,700 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய 1,700 ஏக்கர் விவசாய நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆனால் பரந்தூர் மக்கள் இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களை முன்னெடுத்தனர். 2 ஆண்டுகள் முன் கட்சி தொடங்கிய விஜய், தனது முதல் அரசியல் செயல்பாடாக பரந்தூர் சென்று அம்மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். பரந்தூரில் விமான நிலையம் வராது என்ற உறுதியை விவசாயிகளுக்கு விஜய் கொடுத்தார்.

**விமான நிலையம் கைவிடப்படுமா?**

தற்போது விஜய் தலைமையில் தவெக ஆட்சி அமைந்துள்ள நிலையில் பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்படுமா என்ற கேள்வி எழுந்தது.

இதுதொடர்பாக புதிய அரசு மேற்கொண்ட ஆலோசனையில், கையகப்படுத்தப்பட்ட 1,700 ஏக்கர் நிலத்தில் சிப்காட் கொண்டு வர திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியானது. இது பலரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் பரந்தூரில் விமான நிலையம் அவசியம் குறித்து விமான நிலைய ஆணைய அதிகாரிகள் ஆய்வறிக்கையை தயாரித்துள்ளனர்.

இதனிடையே பொதுமக்களின் தொடர் எதிர்ப்பால் நில எடுப்பு பணிகள் நிறுத்தப்பட்டதால் விமான நிலைய ஆணையம் (AAI) அதிர்ச்சி அடைந்துள்ளது. இந்தநிலையில், மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் அதிகாரிகளுடன் இணைந்து, விமான நிலைய ஆணையம் ஆய்வறிக்கை ஒன்றை தயாரித்துள்ளது. அந்த அறிக்கையை விரைவில் முதல்–அமைச்சர் விஜய்யிடம் அதிகாரிகள் சமர்ப்பிக்க உள்ளனர்.

**சென்னையில் 2–வது விமான நிலையம்**

அறிக்கை குறித்து பேசிய ஆணைய அதிகாரிகள், சென்னையில் 2வது விமான நிலையம் என்பது காலத்தின் கட்டாயம். அதற்காகவே பரந்தூர் விமான நிலையத்தை பரிந்துரைத்துள்ளோம். இங்கிருந்து பல்வேறு நாடுகளுக்கு விமானங்களை இயக்க முடியும்.

அடுத்த30முதல்50ஆண்டுகளுக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் விமான நிலையம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கான நில அமைப்பியல், சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் போக்குவரத்து இணைப்பு குறித்த ஆய்வுகள் அனைத்தையும் முடித்து அறிக்கை தயாரித்துள்ளோம்.

விமான நிலையத்தை சுற்றி உருவாக உள்ள ஏரோட்ரோபோலிஸ் தமிழ்நாட்டின பொருளாதார வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும். இந்த திட்டம் தொடர்பாக விரைவில் முதல்–அமைச்சர் விஜய்யை சந்திக்க உள்ளோம் என்று தெரிவித்துள்ளனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020